## வெள்ளை அறிக்கையில், தி.மு.க. அரசை குறை சொன்னதெல்லாம் பொய் என நிரூபித்துள்ளனர்!

# மக்கள் அனைவருக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ள பட்ஜெட்!

## முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை,ஆக.6-

வெள்ளை அறிக்கையில் தி.மு.க அரசைப் பற்றி குறைசொன்னதெல்லாம்பொய்எனநிரூபித்துள்ளார் நிதியமைச்சர். த.வெ.க. அரசின் முதல் பட்ஜெட் அரசின் முதல் பட்ஜெட்டே மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று சென்னை அறிவாலயத்தில் நேற்று 5.8.2026 முன்னள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் கூறியுள்ளார்.

மக்களை ஏமாற்றத்தில் தள்ளிய தவெக அரசின் நிதிநிலை அறிக்கை தொடர்பாக கழக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களின் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திமுக ஆட்சியில் நிகரக் கடன் ரூ.1 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால் தற்போது அது ரூ.1,22,000 கோடியாக உயர்ந்துள்ளது.

தவெக அரசில் ரூ.3,000 கோடி அளவுக்கு மூலதனச் செலவு குறைக்கப்பட்டுள்ளது. ரூ.7,000 கோடி அளவிற்கு வருவாய் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் சுமார் ரூ.3,000 கோடி அளவுக்கு குறைந்துள்ளது. வருவாய் செலவினங்கள் ரூ.3.93 லட்சம் கோடியாக இருந்தது. தற்போது ரூ.4.05 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

வெள்ளை அறிக்கையில் திமுக அரசைப் பற்றிக் குறை சொன்னதெல்லாம் பொய் என நிரூபிக்கும் ஆவணமாக பட்ஜெட் உள்ளது

2026-27 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளார். இந்த நிதிநிலை அறிக்கை, தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை எந்த அளவிற்கு ஏமாற்றமடையச் செய்துள்ளது என்பதை அனைவரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

### முக்கிய வாக்குறுதிகள் இடம் பெறவில்லை!

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்த பட்ஜெட், மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. குறிப்பாக, தவெக அரசு தேர்தல் வாக்குறுதிகளாக அறிவித்திருந்த பல முக்கிய வாக்குறுதிகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை என்பதையும் மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

இந்த நிதிநிலை அறிக்கையின் ஒட்டுமொத்த சாராம்சம் குறித்தும், மக்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு இந்த அறிக்கை பூர்த்தி செய்யத் தவறியுள்ளது என்பது குறித்தும், இன்று நமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்து விரிவாக விளக்கியுள்ளார்.

நான் இந்த செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட விரும்புவது, நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் இடம்பெற்ற கருத்துகளையே ஆகும். வெள்ளை அறிக்கையில் நிதியமைச்சர் அவர்கள் நான்கு முக்கிய அம்சங்களை எடுத்துரைத்திருந்தார். அந்த நான்கு அம்சங்களுக்கும் நான் அன்றே விளக்கம் அளித்திருந்தேன். இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது, அன்றைய தினம் நாங்கள் தெரிவித்த கருத்துகளே உண்மையாகியுள்ளன என்பதை தெளிவாகக் காண முடிகிறது.

தமிழ்நாடு இதற்கு முன் இல்லாத அளவிற்கு கடன் சுமையைச் சந்தித்து வருகிறது. தற்போது மாநிலத்தின் மொத்தக் கடன் ரூ.10 லட்சம் கோடியை எட்டியுள்ளது. ரூ.5 லட்சம் கோடி கடன், வெறும் ஐந்து ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

### அடுத்த 5 ஆண்டுகளில் கடன் ரூ. 20 லட்சம் கோடி!

ஆனால், இந்தக் கடன் சுமைக்கு முழுக் காரணமும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்ற மாயத் தோற்றத்தை நிதியமைச்சர் அவர்கள் திட்டமிட்டு உருவாக்க முயன்றார்.



அப்போது நான் தெளிவாகக் கூறியது என்னவென்றால், மாநில அரசுகள் கடன் வாங்குவது ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள வரம்புகளுக்கும், நிதிக்குழு (Finance Commission) வகுத்துள்ள விதிமுறைகளுக்கும் உட்பட்டே நடைபெறுகிறது. மேலும், ஆண்டுதோறும் கடன் அதிகரிக்கும் இயல்பான சூழ்நிலை உள்ளது. இந்த நிலை தொடர்ந்தால், தற்போது ரூ.10 லட்சம் கோடியாக உள்ள கடன், அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.20 லட்சம் கோடியை எட்டும் என்பதையும் அன்றே நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இன்று மதிப்பிற்குரிய நிதித்துறை யின் கூடுதல் தலைமைச் செயலாளர் செய்தியாளர்களைச் சந்தித்தபோதும், “கடன் வாங்குவதை முற்றிலும் தவிர்க்க முடியாது; ஒன்றிய அரசின் அனுமதியுடன்தான் மாநில அரசு கடன் வாங்குகிறது; கடன் வாங்கும் அளவு தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கும்” என்று தெரிவித்தார். இது, நாங்கள் முன்வைத்த கருத்துக்கு அவர்களே அளித்த ஒப்புதலாகும்.

இந்த ஆண்டில் மட்டும் மாநிலத்தின் நிகரக் கடன் (Net Borrowing) ரூ.1,22,000 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே நிலை தொடருமானால், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மாநிலத்தின் கடன் சுமை மேலும் பெருமளவில் அதிகரிக்கும். நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகியபோது, நிகரக் கடன் ரூ.1 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால் தற்போது, அதைவிட ரூ.22,000 கோடி அதிகமாகக் கடன் வாங்குவதாக அவர்களே இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், வருவாய் பற்றாக்குறை (Revenue Deficit) குறித்து பேசும்போது, நாங்கள் ஆட்சியை விட்டு வெளியேறியபோது அது ரூ.48,699 கோடியாக இருந்தது. ஆனால் தற்போதைய நிதிநிலை அறிக்கையில் அது ரூ.55,775 கோடியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, சுமார் ரூ.7,000 கோடி அளவிற்கு வருவாய் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

மூலதனச் செலவுகள் (Capital Expenditure) தொடர்பாக, “நீண்டகால வளர்ச்சித் திட்டங்களை திமுக அரசு செயல்படுத்தவில்லை; பெரும்பாலான நிதி வருவாய் செலவுகளுக்கே பயன்படுத்தப்பட்டது” என்று அப்போது நிதியமைச்சர் குற்றம்சாட்டினார்.

மேலும், மூலதனச் செலவுகளுக்கு முந்தைய அரசு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்ற தோற்றத்தையும் உருவாக்க முயன்றார்.

### மூலதன் செலவு!

ஆனால் உண்மை என்னவென்றால், எங்கள் ஆட்சியில் மூலதனச் செலவுகளுக்காக ரூ.59,662 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போதைய பட்ஜெட்டில் ரூ.56,985 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது, சுமார் ரூ.3,000 கோடி அளவுக்கு மூலதனச் செலவு குறைக்கப்பட்டுள்ளது. இதைத் திருத்திய மதிப்பீட்டுடன் (Revised Estimate) ஒப்பிட்டுப் பார்த்தாலும் இதே நிலைதான் வெளிப்படுகிறது.

அதேபோல், மாநில அரசின் சொந்த வரி வருவாய் (State's Own Tax Revenue - SOTR) பற்றியும் அவர்கள் பெரிதும் பேசினர். ஆட்சிக்கு வந்தவுடன், “திறமையான நிர்வாகம், சிறந்த நிதி மேலாண்மை மற்றும் வரி வசூலில் உள்ள கசிவுகளைத் தடுப்பதன் மூலம் மாநிலத்தின் சொந்த வரி வருவாயை கணிசமாக உயர்த்துவோம்” என்று அறிவித்தனர்.

ஆனால் தற்போது வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரங்களைப் பார்த்தால், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் அவர்கள் கூறிய அளவிற்கு உயரவில்லை. மாறாக, எதிர்பார்த்ததை விட சுமார் ரூ.3,000 கோடி அளவுக்கு குறைவாகவே உள்ளது. இதன் மூலம் அவர்கள் கூறிய நிதி மேலாண்மை குறித்த வாக்குறுதிகள் நடைமுறையில் வெற்றி பெறவில்லை என்பது தெளிவாகிறது.

### எந்த தெளிவும் இல்லை!

அதேபோல், வருவாய் செலவினங்களை (Revenue Expenditure) எடுத்துப் பார்த்தாலும், நாங்கள் ஆட்சியில் இருந்தபோது அது ரூ.3.93 லட்சம் கோடியாக இருந்தது. தற்போது அது ரூ.4.05 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

எனவே, வெள்ளை அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை விமர்சித்து கூறிய அம்சங்களில்கூட தற்போதைய அரசு வெற்றி பெறவில்லை என்பதையே, அவர்களின் முதல் நிதிநிலை அறிக்கையே தெளிவாக நிரூபிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு தற்போது புதிய பெயர்கள் சூட்டி மீண்டும் அறிவிப்பதே நடைபெறுகிறது. ஆனால், அந்தத் திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதற்கான உரிய நிதி ஒதுக்கீடுகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை.

மேலும் கூற வேண்டுமென்றால், தமிழ் வளர்ச்சித் துறைக்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதைக் கூட இந்த ஆண்டு அரசு தெளிவாக அறிவிக்கத் தயாராக இல்லை. இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே வருத்தமாக உள்ளது.

அதேபோல், தொல்லியல் துறைக்கு வெறும் ரூ.1 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு கோடி ரூபாயைக் கொண்டு அந்தத் துறையில் என்ன சாதிக்க முடியும்? மாணவர்களைச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லலாம்; அதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், தொல்லியல் சின்னங்களின் பாதுகாப்பு (Conservation), அருங்காட்சியகங்களின் (Museums) மேம்பாடு, புதிய அகழாய்வுகள் (Excavations), நடைபெற்று வரும் ஆய்வுகளின் தொடர்ச்சி ஆகியவற்றிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தத் தெளிவும் இல்லை.

அதேபோல், கொள்ளிடம் பகுதியில் பெரிய தடுப்பணைகள் அமைக்கப்படும் என்றும், டெல்டா மாவட்டங்களின் சுற்றுச்சூழல் சீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இறுதியில் அதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்காக வெறும் ரூ.10 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக, சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கே நிதி ஒதுக்கப்பட்டிருப்பது இந்த அரசின் அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

தேர்தல் வாக்குறுதிகளாக அறிவிக்கப்பட்ட பல முக்கிய திட்டங்கள் குறித்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தக் குறிப்பும் இல்லை. மகளிர் உரிமைத்தொகை உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி, ஆண்டுக்கு ஆறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என்ற வாக்குறுதி, வேலையில்லா பட்டதாரிகளுக்கான உதவித்தொகை உள்ளிட்ட எந்தத் திட்டமும் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

அதேபோல், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கும் பெயர் மாற்றம் செய்து அறிவித்துள்ளனர். பெயரை மட்டும் மாற்றியிருக்கிறார்கள்; ஆனால், புதிய திட்டத்திற்கான போதுமான நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு புதிய பெயர்களைச் சூட்டுவதைத் தவிர, புதிய மக்கள் நலத் திட்டங்களோ, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலான அறிவிப்புகளோ இந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெறவில்லை.

### எதிர்ப்பார்புகளை நிறைவேற்ற தவறிய பட்ஜெட்!

இதனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இந்த பட்ஜெட் தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிய, ஏமாற்றத்தை ஏற்படுத்திய நிதிநிலை அறிக்கையாகவே அமைந்துள்ளது என்பதை தரவுகளின் அடிப்படையில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும், பள்ளிக்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடும் குறைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து நிதித்துறையின் செயலாளர், “ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகச் செலவிடப்படவில்லை” என்று விளக்கம் அளித்துள்ளார்.

ஆனால், அதற்குப் பல்வேறு நிர்வாக மற்றும் சட்டரீதியான காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக, ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) மூலம் ஆசிரியர்கள் நியமனம் செய்யும் பணிகளில் நீதிமன்ற வழக்குகள் காரணமாக தாமதம் ஏற்பட்டிருக்கலாம். இடைக்கால பட்ஜெட் காரணமாக முழு நிதியாண்டுக்குப் பதிலாக குறுகிய காலத்தில் நிதி ஒதுக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கலாம்.

பொதுவாக, எந்த ஆட்சியும் பள்ளிக்கல்வித் துறைக்கான நிதியை குறைப்பதில்லை. கல்வி வளர்ச்சிக்கே எப்போதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அந்த வகையில், பள்ளிக்கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வருத்தமளிக்கும் விஷயமாகும்.

சாதாரண மக்கள், குறிப்பாக மகளிர், மகளிர் உரிமைத்தொகை ரூ.2,500 ஆக உயர்த்தப்படும் என்று மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தார்கள். அந்த நம்பிக்கையில்தான் பலர் இந்த அரசுக்கு ஆதரவாக இருந்திருக்கக்கூடும். ஆனால், இந்த பட்ஜெட் அனைவருக்கும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

மேலும், நாட்டின் பழமையான நாகரிகங்களைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். ஆனால், உலகப் புகழ்பெற்ற கீழடி நாகரிகம், பொருநை நாகரிகம், வைப்பாற்றங்கரை நாகரிகம் போன்ற தமிழரின் தொன்மை நாகரிகங்களைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு வார்த்தை கூட இடம்பெறவில்லை.

### உரிய முக்கியத்துவம் இல்லை!

அண்மையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மலையடிப்பட்டி அகழாய்வுத் தளத்தை நேரில் பார்வையிட்டார். அதுபோன்ற அகழாய்வு முயற்சிகளுக்கோ, தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகத்தை உலகளவில் எடுத்துச் செல்லும் முயற்சிகளுக்கோ இந்த பட்ஜெட்டில் உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மொழி, நாகரிகம் ஆகியவற்றை முன்னிறுத்த வேண்டிய அடிப்படை உணர்வுகூட இந்த நிதிநிலை அறிக்கையில் வெளிப்படவில்லை என்பது மிகவும் வருத்தமளிக்கிறது. முடிவாகச் சொல்ல வேண்டுமென்றால், 2026-27 ஆம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கை, தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாத, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய, புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கான தெளிவான நிதி ஒதுக்கீடுகளை வழங்காத ஒரு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட்டாக அமைந்துள்ளது.

இந்தப் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள புள்ளிவிவரங்களே, வெள்ளை அறிக்கையில் முந்தைய திமுக ஆட்சியை விமர்சித்து தவெக அரசால் கூறப்பட்ட பல கருத்துகள் நடைமுறையில் நிலைக்கவில்லை என்பதை நிரூபிக்கின்றன. எனவே, இந்த அரசின் முதல் முழுமையான நிதிநிலை அறிக்கை, அவர்களுடைய தேர்தல் வாக்குறுதிகளுக்கும், நிர்வாகக் கூற்றுகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணமாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு அவர் பேட்டியளித்துள்ளார்.

---

## உதயநிதி ஸ்டாலின் கைது செய்ததை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 15 இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்ட

# முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா உள்ளிட்ட 5 ஆயிரம் கழகத்தினர் கைது

## காவல் துறையை கண்டித்து முழக்கங்கள்

சென்னை,ஆக.6-

உதயநிதி ஸ்டாலின் கைது செய்ததை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் 15 இடங்களில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி - எஸ்.ஆர். ராஜா உள்ளிட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினரை காவல்துறையினர் கைது செய்தனர். இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினர் காவல் துறையையும் த.வெ.க. அரசையும் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் - கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று காலை பொய் வழக்கில் கைது செய்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்ததைக் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 15 இடங்களில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு ஊர்வலமாகச் சென்று கண்டன முழக்கங்களை எழுப்பி சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் முஸ்லீம் தெருவில் இருந்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் கழகத்தினர் அணி திரண்டு காவல் துறையையும் - த.வெ.க. அரசையும் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பிக் கொண்டே ஊர்வலமாக புறப்பட்டு சென்றனர்.

குன்றத்தூர் பேருந்து நிலையத்தில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி, குன்றத்தூர் நகரச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி உள்ளிட்ட 600-க்கும் மேற்பட்ட கழகத்தினரை காவல் துறையினர் கைது செய்தனர்.

குரோம்பேட்டை பேருந்துநிலையம் முன்பு மண்டல குழுத் தலைவர் - பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையிலும், பகுதி செயலாளர்கள் ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் 500-க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

தாம்பரம் பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை அருகில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையிலும், பகுதி செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ் ஆகியோர் முன்னிலையிலும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் அருகில் பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி - த.ஜெயகுமார் ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாநகர துணைச் செயலாளர் இரா. நரேஷ்கண்ணா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எல். பிரபு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியப்பிரபு, துணை அமைப்பாளர் ச.பிரபு உள்ளிட்ட 500-க்கும் மேற்பட்ட கழகத்தினரை காவல் துறையினர் கைது செய்தனர்.

ஆலந்தூர் ஆதம்பாக்கம் அம்பேத்கர் திடல் அருகே பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்ட 450 கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

படப்பை பஜாரில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் 250-க்கும் மேற்பட்ட கழகத்தினரும்.

திருப்பெரும்புதூர் பேருந்து நிலையம் மணிக்கூண்டு அருகில் ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி - ந.கோபால் - நகரச் செயலாளர் ஆ.எ.சதீஷ்குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 250-க்கும் மேற்பட்ட கழகத்தினரும் கைதானார்கள்.

மறைமலைநகர் பேருந்து நிலையம் அருகே மறைமலைநகர் வடக்கு நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் தலைமையிலும், தெற்கு நகரச் செயலாளர் த.வினோத்குமார் - காட்டாங்குளத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் கே.பி.ராஜன் முன்னிலையிலும் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் து. மூர்த்தி உள்ளிட்ட 250-க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

நந்திவரம் - கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகில் நகரச் செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் தலைமையிலும், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம். டி.லோகநாதன் முன்னிலையிலும் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில்

நகர மன்றத் தலைவர் பொறுப்பு ஜி.கே.லோகநாதன், கஜா (எ) கஜேந்திரன், ஏ.கருணாகரன், ஜான் தினகரன், பெப்சி கண்ணன் உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

திருக்கழுக்குன்றம் பேருந்து நிலையம் அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி தலைமையிலும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் செல்வகுமார் உள்ளிட்ட 250 கழகத்தினர் கைதானார்கள்.

திருப்போரூர் பேருந்து நிலையம் அருகில் திருப்போரூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம். சேகர், திருப்போரூர் பேரூர் செயலாளர் மு.தேவராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புச் செழியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.விஜயகுமார், பேரூராட்சி துணைத் தலைவர் பரசுராமன் உள்ளிட்ட 250 கழகத்தினரை கைது செய்தனர்.

செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் ப.சந்தானம் ஆகியோர் தலைமையில் நடியாபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் செ.அருள் தேவி உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட கழகத்தினர் கைதானார்கள்.

புனிததோமையர்மலை வடக்கு ஒன்றியத்தின் சார்பில் மூவரசம்பட்டில் ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி தலைமையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் ப.பிரசாத், ஒன்றிய துணை செயலாளர் செல்வராஜ், பொருளாளர் ராஜா உள்ளிட்ட 200 கழகத்தினரும்.

அகரம் தென் ஊராட்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் அகரம் ஜெகன் தலைமையில் 100 கழகத்தினரும் கைது செய்யப்பட்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் மொத்தமாக 15 இடங்களில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினரை காவல் துறையினர் கைது செய்தனர்.

---

## பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! டி.சதிஷ்குமார் தலைமை!

# துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள் ‘போராளி ஓய்வதில்லை’ புகழரங்கம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன்.எம்.பி. துவக்கி வைக்கிறார்! இந்து.என்.ராம் - ஆளூர் ஷாநவாஸ், முனைவர் பர்வீன் சுல்தானா புகழுரை!

சென்னை,ஆக.6-

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் புகழரங்கம் போராளி 1 ““முத்தமிழ் என்றால் தன்மானம் மூச்சிலே நின்ற தமிழ் மானம்” எனும் தலைப்பில் 7/08/26 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் 59 வது வட்டக் கழகச் செயலாளர் டி.சதிஷ்குமார் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி கே சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ் முரளி எஸ் ராஜசேகர், இரா நரேந்திரன், எம் விஜயகுமார், ஜி.எம்.தேவன், பி ஸ்ரீராமுலு ,இசட் ஆசாத்,,என் பி எம் ஷேக் அப்துல்லா,ராஜேஷ் ஜெயின்,இப்ராஹிம் கனி,இரா.கலைச்செல்வி, நா. ரஞ்சித் விஜயாலயன், பி. விஜயகுமார்,எல்.சம்பத்குமார்,எம்.விநாயகம் வெ.பரிமளம், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே ஜனார்த்தனன், கே ஆர் அபரஞ்சி, மா முத்துக்குமார், ந. சுந்தரம், எஸ் சந்தியாகு, வி. சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன்

ஆ.நா.பார்த்திபன்,கே கவியரசு எல் சத்யநாராயணன், எஸ் புகழேந்தி,ஆர் ஏ அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா,எம்.பரத்குமார்,,மா. ஜெய்சங்கர்,,பா. கதிரவன் ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி, பா. அண்ணாதுரை,டி. ஆகியோர் வரவேற்க ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப் புகழரங்கத்தை கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் டாக்டர் எஸ் ஜெகத்ரட்சகன் துவக்கி வைக்க இந்து குழும நிறுவனர் இந்து என். ராம். விசிக முதன்மைச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ், மதுரை உலக தமிழ்ச் சங்க முன்னாள் துணைத் தலைவர் முனைவர் பர்வீன் சுல்தானா ஆகியோர் புகழுரைகின்றனர் .

மேலும் இப் புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்பி, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி, இரா.கிரிராஜன் எம்பி, ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி கே மூர்த்தி, கே எஸ் எம். நாதன், கே சந்துரு, சி. மகேஷ் குமார் மாவட்ட நிர்வாகிகள் தேவஜவகர், ஜி எம் தேவன்,புனிதவதி எத்திராஜன், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பி.ஜெயின், வேவாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ நாகராஜன், ஜோசப் சாமுவேல், டிஎஸ்பி ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, சொ. வேலு, வி சுதாகர், , பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோமணி, எம் பி உதயசங்கர், சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி. பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், ஜெ. பாலமுருகன், ஜி ஜே பிரபு, கே வினோத், எஸ். தனசேகர்,நா ரஞ்சித் விஜயாலயன், எல் பி எஃப் மோகன், ஜி தாமோதரன், நா துலுக்கானம், கு கிருஷ்ணமூர்த்தி, ஆர் எஸ் சித்திக், இரா வீரமணி, ம.அசோக் குமார் எம் விநாயகம், சுதா தீனதயாளன் ,ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி சாந்த குமாரி, ஜி.வி. நாகவள்ளி மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் வட்டக் கழகச் செயலாளர் வேபா பிரபாகரன் நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற அலுவலகத்தில் நேற்று துறைமுகம் சட்டமன்றத் தொகுதி பகுதி செயலாளர்கள் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி. கே. சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.